IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.281/2014
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 03.55PM

வா.சா. 1 சாட்சி இராமசாமி த.பெ.பால்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 12.08.2025 in accordance with the provisions of Act XX141.**

6 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. வா.சா.ஆ. 12 மற்றும் வா.சா.ஆ. 13 ஆவணங்கள் அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து வழக்குரையிலோ, பதிலுரையிலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி வா.சா.ஆ. 12 மற்றும் வா.சா.ஆ13 ஆவணங்கள் குறித்து எனது வழக்குரையிலோ, பதிலுரையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

2. பிராதை படிக்க முடியுமா என்றால் பிராது ஆங்கிலத்தில் உள்ளதால் படிக்க இயலாது. வா.சா.ஆ13 ஆவணத்தில் வண்டிப்பாதை என்ற அடையாள குறிப்பு இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ13 ஆவணத்தில் தாவா புலத்திற்கு வடக்கு பக்கம் சர்வே எண்.164/4 உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ12 ஆவணமானது புல எண்.164/4 ல் ஏற்பட்ட கிரையத்தை பொறுத்த ஆவணம் என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்தானது எனது மூதாதையருக்கு பாத்தியப்பட்டது என்று காட்டகூடிய வருவாய் ஆவணங்களான SLR 1948 க்கு பின்பு ஏற்படுத்தப்பட்ட Reservay Resettlement காலத்தில் ஏற்படுத்தப்பட்ட 10(1) சிட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

மேற்படி சொன்ன SLR 1948 க்கு பின்பு ஏற்படுத்தப்பட்ட Reservay Resettlement காலத்தில் ஏற்படுத்தப்பட்ட 10(1) சிட்டா தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்ததாக தவறாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. தாவா புலம் அமைந்துள்ள சர்வே எண்.164/8ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 80 செண்டு நிலமும், ஆதியில் பெருமாள்கவுண்டர் மகன் காயம்புக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. சர்வே எண்.164/8ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 80 செண்டு நிலமும், Reservey Resettlement காலத்தில் காயாம்பு பெயரில் உள்ள பட்டா எண்.135ல் கட்டுப்பட்டிருந்தது என்றால் சரியல்ல.

5. காயாம்புக்கு பின்னிட்டு அவருடைய வாரிசுகளான 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியின் தகப்பனார் ராமசாமியும் அனுபவம் செய்து அரசாங்கத்திற்கு பட்டா எண்.135 ல் நிலவரி செலுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. காயாம்புகவுண்டர் வாரிசுதாரர்கள் அனுபவம் செய்து வந்த நிலையில் உழவடைக்காக எனது தகப்பனார் கேட்டு எனது தகப்பனாருக்கு உழவடை செய்வதற்கு அனுமதியளித்தார்கள் என்றால் சரியல்ல.

6. எனது தகப்பனார் உழவடை செய்த காலத்தில்தான் வா.சா.ஆ12ல் கண்ட சொத்தை பொறுத்து சர்வோதையா சொசைட்டிக்கு தெற்குமாலாக பால்சாமி கவுண்டர் பெயர் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறான நான்குமாலை அடிப்படையாக கொண்டு வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என்று தவறாக வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ8 ஆவணத்தில் வழக்கு சொத்து காயாம்பு கவுண்டர் மற்றும் அவரது வாரிசுகளுக்கு பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ8 ஆவணத்தை செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் அதற்காகத்தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் வழக்கு சொத்தை பொறுத்து எனது உரிமைமூலத்தையும், அனுபவத்தையும் நிரூபணம் செய்யும்விதமாக இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 04.15 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.12 14:33:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.